அரசு இருப்புகளை, கன்னியாகுமரி மாவட்டத்தின் எல்லையோரப் பகுதிகளில் வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருகின்றன. இதனால் தனிப்பட்டவர்கள் அரிசி எடுத்துச் செல்வது முழு அளவில் தடுக்கப்படும். என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தலைவர் அவர்களே, குறுவையைப் பொறுத்த மட்டில் நான் ஏற்கெனவே சொன்னேன். குறுவை அறுவடைக்கு வருகிற நேரத்தில் தஞ்சை மாவட்டத்தில் எவ்வளவு கிடைக்கிறதோ அவ்வளவையும் உணவுக் கழகமும், தமிழ்நாடு வர்த்தகக் கழகமும் வாங்கும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

## 4. அரசினர் தீர்மானம்.

### விதி 41(3)ஐத் தளர்த்தல்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்.—தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

"பேரவையின் விதி 41(3)-ஐ தளர்த்தி, இரண்டுக்கு மேற்பட்ட தீர்மானங்களை இன்று எடுத்துக் கொள்ள வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்.—பேரவையின் விதி 41-ன் கீழ், திரு. எ. சுப்பிரமணியம் அவர்கள் ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். அவர் இருக்கையில் இல்லை. ஆகவே, தீர்மானம் தள்ளுபடி செய்யப்படுகிறது.

## 5. கவன ஈர்ப்பு.

(அ) திருச்செந்தூர் பகுதியில் இறால் மீன் பிடிப்பதுபற்றி ஏற்பட்ட தகராறு குறித்து.

**Thiru N. DENNIS**—Sir, I call the attention of the Hon. Minister for Harijan Welfare to a matter of urgent public importance, namely, the dispute over the prawn fishing at Tiruchendur area between various sections of people affecting harmony and export.

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து** : திருச்செந்தூர் பகுதியில் மக்களில் பல பிரிவினருக்கிடையே ஒற்றுமையும் மீன் ஏற்றுமதியும் பாதிக்கப்படும் வகையில், இறால் மீன் பிடிப்பது பற்றித் தகராறு ஏற்பட்டது குறித்து மாண்புமிகு உறுப்பினர் தமது நாட்ட ஈர்ப்பு அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளார்.

திருநெல்வேலி மாவட்டம், திருச்செந்தூர் வட்டத்தில், கட்டுமரங்களையும், நாட்டுப் படகுகளையும், பயன்படுத்தி மீன்பிடித்துவரும் ஓவரி, மணப்பாடு, வீரபாண்டியன்பட்டிணம், பெரியதாழை கிராமத்து மீனவர்கள் இந்தப் பகுதியில் விசைப் படகுகள் மூலம் மீன்பிடிப்பதற்கு